
புரட்சிப்

# பெரியார் முழக்கம்

திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு

www.dvkperiyar.com



ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன்

• திருவள்ளுவர் ஆண்டு 2054 • ஜனவரி 04, 2024 • புரட்சி 23 • முழக்கம் 51 • விலை ரூ.3.00

# எழுச்சியோடு முடிந்த 2023 கழகம் ஆற்றிய பணிகள்

**தொகுப்பு : ர.பிரகாசு**

**ஜனவரி:** பொங்கல் விழா அழைப்பிதழில் “தமிழ்நாடு” என குறிப்பிட மறுத்தது, தமிழ்நாடு அரசின் இலச்சினையை பயன்படுத்த மறுத்தது, பின்னர் எதிர்ப்புகளுக்கு அடிபணிந்தது என ஆளுநரின் அதிகார மீறல்களோடுதான் 2023 தொடங்கியது. சட்டப்பேரவையில் ஜனவரி 9-ஆம் தேதி ஆளுநர் உரையை வாசித்த ஆர். என்.ரவி, சில முக்கியப் பகுதிகளை வெட்டியும் ஒட்டியும் திரித்தும் வாசித்தார். திராவிட மாடல், சுயமரியாதை, சமூக நீதி, சமத்துவம், பெரியார், அம்பேத்கர், அண்ணா, கலைஞர், காமாராசர் ஆகிய வார்த்தைகளை உச்சரிக்க மறுத்துவிட்டார். ஆனால் அரசு தயாரித்த உரைதான் பதிவேட்டில் இடம்பெறும் என முதலமைச்சர் தீர்மானம் கொண்டுவந்ததால், வேறு வழியின்றி சட்டமன்றத்தை விட்டு ஓட்டம்பிடித்தார் ஆர்.என். ரவி. ஆணவம் பிடித்த ஆளுநர் ஆர்.என்.ரவியை திரும்பப் பெறக்கோரி மேட்டூர், சேலம், ஈரோடு, திருப்பூர் பகுதிகளில் கழகத்தின் சார்பில் உடனடியாக கண்டன ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றன.

ஜனவரி 13-ஆம் தேதி சென்னை ராயப்பேட்டையில் மாவட்டக் கழகம் சார்பில் பொங்கல் விழா நிகழ்ச்சி நடத்தப்பட்டது. இந்நிகழ்ச்சியில் கலந்துகொண்ட திமுக இளைஞரணி செயலாளரும் அமைச்சருமான உதயநிதி அவர்கள், “அதிகார வரம்புகளை மீறும் ஆளுநர்கள்” என்ற கழகப் பொதுச்செயலாளர் விடுதலை ராசேந்திரன் அவர்களின் நூலை வெளியிட்டார். மிகச் சிறப்பான அட்டைப் படத்தோடு, மிகக் குறுகிய காலத்தில் இந்நூலை வெளியிட்டிருப்பதாக அமைச்சர் உதயநிதி பேசும்போது பாராட்டினார்.

சென்னை புத்தகக் காட்சியின் நிறைவு விழாவில் பேசிய முதலமைச்சர் மு.க.ஸ்டாலின், பெரியாரின் எழுத்துக்களும் பேச்சுக்களும் 21 மொழிகளில் மொழிபெயர்க்கப்படும் என அறிவித்தார். அதற்கான பணிகளும் தொடங்கி நடைபெற்று வருகின்றன. பெரியாருடைய எழுத்துக்களும் சிந்தனைகளும் உலகம் முழுவதும் பரவ வேண்டுமென்பதற்காக, குடி அரசு இதழை 28 தொகுதிகளாக வெளியிட்டு, அதற்கான சட்டப் போராட்டங்களையும் நடத்தியது பெரியார் திராவிடர் கழகம். அந்தவகையில் கழகத்திற்கு மகிழ்ச்சியை ஏற்படுத்திய அறிவிப்பாக முதலமைச்சரின் பேச்சு அமைந்தது.

ஜனவரி 28-ஆம் தேதி திருச்சி, பெரம்பலூர் மாவட்டக் கழகங்கள் சார்பில் “காந்தி முதல் கவுரி லங்கேஷ்” வரை என்ற தலைப்பில் சிறப்புக் கருத்தரங்கம் நடைபெற்றது. கழகத் தலைவர் கொளத்தூர் மணி, விசிக துணைப் பொதுச்செயலாளர் வன்னி அரசு ஆகியோர் கருத்துரையாற்றினர்.

காரைக்குடியில் கழகத் தோழர் இளங்கோவன் புதிதாகக் கட்டிய தனது இல்ல வளாகத்திற்குள் மார்பளவு பெரியார் சிலை நிறுவினார். சிலை திறக்கப்படுவதற்கு முன்பே, வருவாய்த்துறை-காவல்துறை திரண்டு வந்து ஜனவரி 29-ஆம் தேதி சிலையை அகற்றினர். எச்.ராஜாவின் பண்ணை இல்லம் அருகில் இருந்ததால், பா.ஜ.க-வினர் முறையீட்டின் அடிப்படையில் இந்நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதாகச் சொல்லப்பட்டது. செய்தி அறிந்தவுடன் அமைச்சர் உதயநிதி, கழகத் தலைவரை தொடர்புகொண்டு உரிய நடவடிக்கை எடுப்பதாகத் தெரிவித்தார். அதன்படி மீண்டும் அந்த இடத்தில் பெரியார் சிலை வெற்றிகரமாக நிறுவப்பட்டது.

**பிப்ரவரி** : 02.02.2023 அன்று சேலம் திருமலைகிரி கோயிலுக்குள் ஜாதி பேதமின்றி அனைத்து இந்துக்களையும் வழிபட அனுமதிக்கக்கோரி கழகத்தின் சார்பில் ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது.

05.02.2023 அன்று ஈரோடு பிரியாணிபாளையத்தில் “பெண்கள் சந்திப்பு” நிகழ்ச்சி நடைபெற்றது.

06.02.2023 அன்று சென்னை மந்தைவெளி பகுதியில் “காந்தி படுகொலை நாள்” பொதுக்கூட்டம் நடைபெற்றது. பரப்புரைச் செயலாளர் பால்.பிரபாகரன் உரையாற்றினார்.

சேலம் ஏ.வி.எஸ். கல்லூரியின் விசுவல் கம்யூனிகேசன் துறையானது ஊடகம் மற்றும் சமூக அறிவியல் மையத்தோடு இணைந்து, “பராசக்தி திரைப்படம் -வாசிப்பு மற்றும் மீள் வாசிப்பு” என்ற தலைப்பில் 2 நாள் மாநாடு நடத்தியது. 10.02.2023 அன்று அந்த மாநாட்டில் கலந்துகொண்ட கழகத் தலைவர் கொளத்தூர் மணி, ”பராசக்தி திரைப்படத்தின் சமூக நீதிக் கருத்துக்கள்” என்ற தலைப்பில் உரையாற்றினார்.

15.02.2023 அன்று சென்னை தலைமை அலுவலகத்தில் கழகத்தின் தலைமைக் குழு கூடியது. ஏப்ரல் 29, 30 ஆகிய தேதிகளில் சேலத்தில் மாநில மாநாடு நடத்துவதாக தீர்மானிக்கப்பட்டது. இது தோழர்களிடையே மிகப்பெரிய உற்சாகத்தை ஏற்படுத்தியது.

18.02.2023 அன்று “1929 சுயமரியாதை மாநாடும் தமிழ்நாட்டின் அரசியலும்” என்ற தலைப்பில் கோவையில் கருத்தரங்கம் நடத்தப்பட்டது. கழகத்

தொடர்ச்சி 4ம் பக்கம்

# பெரியார் பல்கலை-யை நிர்வகிக்க ஐ.ஏ.எஸ். வேண்டும்

## கழகத் தலைவர் கொளத்தூர் மணி அறிக்கை



சேலம் பெரியார் பல்கலைக்கழகத்தில் நடந்த முறைகேடுகளுக்காக துணைவேந்தர், பொறுப்பு பதிவாளர் உட்பட நால்வர் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டிருக்கிறது. துணைவேந்தர் கைது செய்யப்பட்டு நிபந்தனை ஜாமினில் உள்ளார். தனக்கு இதய வலி இருப்பதாகச் சொல்லி (அதன் உண்மைத் தன்மையையும் ஒரு மருத்துவக் குழு உறுதி செய்ய வேண்டும்) மருத்துவமனையில் படுத்துக் கொண்டிருக்கிறார்.

2024 ஜனவரி 2ஆம் நாள் பல்கலைக்கழகம் விடுமுறை முடிந்து திறக்கப்பட்டு விட்டது.ஆனால் துணைவேந்தர் பதிவாளர் யாரும் இல்லாமல் எந்த முன்னெடுப்புகளும் தீவிரமாய் எடுக்க முடியாமல் நிலை தடுமாறி நிற்கிறது பல்கலைக்கழகம்.

இன்னொரு பக்கம் பிணையில் இருந்தாலும் பல்கலைக்கழகத்தில் துணைவேந்தரின் செயல்பாடுகள் தொடர்ந்து நடப்பதாகவே நாம் அறிகிறோம்.வழக்கு பதியப்பட்டு கைது செய்யப்பட்டுள்ள நிலையில் வழக்குக்கு தொடர்பான ஆவணங்கள் பல்கலைக்கழகத்தில் தான் இருக்கின்றன என்ற நிலையில் அவர் பல்கலைக்கழகத்திற்குள் வரக்கூடாது என்றோ, வழக்கின் ஆவணங்களை, சாட்சியங்களைக் கலைக்கக் கூடாது எனும் இயல்பான நிபந்தனைகளைப் பற்றிய அக்கறையில்லாமல் அங்கு இருக்கிற பல்வேறு பதிவேடுகள் எடுக்கப்படுவதும் வைக்கப்படுவதுமான செயல்பாடுகள் நடக்கின்றன என்றாலே சாட்சியங்களை கலைக்க முயற்சிக்கிறார் என்று தான்பொருள். அவ்வாறாயின் புதிய நிபந்தனைகளையாவது அறிவித்தாக வேண்டும் அல்லது உரிய காப்பு நடவடிக்கை எடுத்தாக வேண்டும்.

அதோடு பல்கலைக்கழகத்தில் எதுவும் நடைபெறாமல் ஸ்தம்பித்துள்ள நிலையில் அதற்கு ஏதேனும் ஒரு மாற்று ஏற்பாடுகளும் செய்து தான் தீர வேண்டும்.

நாம் ஏற்கனவே பலமுறை துணைவேந்தர் மீது விசாரணை நடத்துகிற போது ஒரு பொறுப்புள்ள அய்.ஏ.எஸ் அதிகாரியை நியமித்து அவர் கட்டுப்பாட்டில் பல்கலைக்கழகம் இயங்குவற்கான முயற்சிகளை செய்ய வேண்டும்; அப்போதுதான் அவர்கள் செய்துள்ள முறைகேடுகளை நிரூபிக்க முடியும் என்ற காரணத்தால் இந்த வேண்டுகோளை கைதுக்கு முன்னதாகவே பல வேளைகளில் நாம் வைத்திருக்கிறோம்.

இப்போது உள்ள நிலையில் மீண்டும் அதே கோரிக்கையை நாங்கள் வலியுறுத்தி வேண்டுகிறோம். பல்கலைக்கழகத்தின் துணைவேந்தரும் பதிவாளரும் இல்லாமல் இருக்கிற நிலையும் அவர்களுடைய முறைகேடுகளை சரியாக விசாரிப்பதற்கு ஏதுவாகவும் பல்கலைக்கழகத்தில் ஒரு ஐஏஎஸ் அதிகாரி பொறுப்பில் இயங்கச் செய்வது தான் பொருத்தமாக இருக்கும் என்ற காரணத்தால் தமிழ்நாடு அரசையும் உயர் கல்வித் துறையையும் உரிய நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என்று வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறோம்.

கொளத்தூர் மணி,
தலைவர், திராவிடர் விடுதலைக் கழகம்.
02.01.2024

## தலையங்கம்

# கீதையில் இருக்கிறது சனாதனம்!

சனாதனத்தை ஒழிக்க வேண்டும், அது மனிதர்களிடையே ஏற்றத்தாழ்வை விதைக்கிறது என்று அமைச்சர் உதயநிதி கூறியபோது, ‘‘இந்துக்களை ஒழிக்க வேண்டும்’’ என்று பேசுகிறார் என திரிபுவாதம் செய்து தேசிய அளவிலான விவாதப்பொருளாக இந்துத்துவா கும்பல் மாற்றியது. சனாதனத்தில் ஏற்றத்தாழ்வுக்கே இடமில்லை, அது ஒரு வாழ்வியல் நெறி என்றெல்லாம் அவரவருக்கு தோன்றியதை, வாய்க்கு வந்ததையெல்லாம் பேசினார்களே ஒழிய, எவரும் சனாதனம் என்றால் இதுதான் என தெளிவாக விளக்கவே இல்லை. பாஜகவை சேர்ந்த முதலமைச்சர் ஒருவரே, இப்போது தெள்ளத்தெளிவாக விளக்கியிருக்கிறார். அசாம் மாநில முதல்வரான ஹிமந்த பிஸ்வா சர்மா தனது X பக்கத்தில் (டிவிட்டர்) கீதையில் குறிப்பிடப்பட்டுள்ள சில வரிகளைப் பதிவிட்டிருந்தார். ‘‘பகவத் கீதையின்படி, பிராமணர்கள், சத்திரியர்கள் மற்றும் வைசியர்கள் ஆகிய மூன்று சாதியினருக்கும் சேவை செய்வது சூத்திரர்களின் இயற்கையான கடமை’’ என்று அந்தப் பதிவில் கூறப்பட்டிருந்தது.

பிற்படுத்தப்பட்டோரை பிரதமர் ஆக்கிவிட்டோம், பழங்குடியினரை குடியரசுத் தலைவர் ஆக்கிவிட்டோம், தாழ்த்தப்பட்ட சமூகத்தைச் சேர்ந்தவரான எல்.முருகனை ஒன்றிய அமைச்சராக்கிவிட்டோம், இதுதான் உண்மையான சமூகநீதி என்றெல்லாம் பேசிவந்த பாஜகவின் போலித்தனத்தை ஒற்றைப் பதிவில் தோலுரித்துவிட்டார் ஹிமந்த பிஸ்வா சர்மா. ஏனெனில் மோடி, திரவுபதி முர்மு, எல்.முருகன் போன்றவர்கள் எல்லாம் பார்ப்பனிய இந்து தேசத்தின் நலன்களுக்குத்தான் பாடுபடுகிறார்களே தவிர, இந்த நாட்டின் பெரும்பான்மை மக்களாகிய சூத்திரர்களுக்கோ, பஞ்சமர்களுக்கோ அல்ல. அதுதான் கீதையிலும் சொல்லப்பட்டிருக்கிறது என்று பாஜக முதல்வரே ஒப்புக்கொண்டிருக்கிறார் என்பதைத்தான் அப்பதிவு காட்டுகிறது. கடுமையான எதிர்ப்புகள் கிளம்பிய பிறகு, அந்தப் பதிவை நீக்கிவிட்டு, மொழிபெயர்ப்பில் தவறு நடந்துவிட்டது என மன்னிப்பு கேட்டிருக்கிறார். மறுபிறவியில் நமக்கு நம்பிக்கை இல்லை என்றாலும் பாஜகவிலும், இந்துத்துவா அமைப்புகளில் மட்டும் எப்படி இத்தனை சாவர்க்கர்கள் உருவாகிக்கொண்டே இருக்கிறார்கள் என்பது மட்டும் நமக்குப் புரியவில்லை.

ஆனால் இதற்காக அவர் மன்னிப்புக் கேட்டிருக்க வேண்டிய தேவையில்லை, கீதையில் அப்படித்தான் சொல்லப்பட்டிருக்கிறது என்று உறுதியோடு நின்றிருக்கலாம். ஏனெனில்

*“சாதுர்வர்ண்யம் மயா சிருஷ்டம குண- கர்ம விபாகச:*
*தஸ்ய கர்த்தாரமபி மாம் வித்தயகர்த்தார- மவ்யயம்”  (அத்.4- சுலோகம் 13)*

‘‘நான்கு வருணங்கள் என்னால் உண்டாக்கப்பட்டவை; அவரவர்களுக்குரிய கருமங்களை அவரவர் மீறாமல் செய்ய வேண்டும். அதனை மாற்றிச் செயல்பட வைக்க அந்த வர்ண தர்ம உற்பத்தியாளனாகிய என்னால்கூட முடியாது’’ என்கிறது பகவத் கீதை. (கிருஷ்ணர் சொல்வதாக)

இப்படி ஒவ்வொரு வர்ணத்தாருக்கும் என்னென்ன கடமைகள் இயற்கையாக வகுக்கப்பட்டுள்ளன என்பதையெல்லாம் கீதையின் 18-வது அத்தியாத்தில் விரிவாக எழுதி வைக்கப்பட்டிருக்கிறது.

*“ப்ராஹ்மண-க்ஷத்ரிய சூத்ராணாஞ் ச பரந்தப*
*கர்மாணி ப்ரவிபக்தானி ஸ்வபாவ - ப்ரபவைர் - குணை:”  (அத்.18- சுலோகம் 41)*

அதாவது பிராமணர்கள், சத்திரியர்கள், வைசியர்கள், சூத்திரர்களுக்கு சுபாவமாக உண்டான குணங்களைக் கொண்டே தர்மங்கள் வகுக்கப்பட்டது என்கிறது கீதை. மனத்தை அடக்குதல், வெளிப்புலன்களை வெல்லுதல், தவம், சுத்தம், பொறுமை, நேர்மை, ஞானம், அனுபவம், ஆஸ்திகத் தன்மை இவை பார்ப்பனர்களுக்கு இயற்கையாக உண்டான கர்மங்களாம். பாரக்கிரமம், பிரதாபம், தைரியம், திறமை, போரில் புறங்காட்டாமை, தானம், ஆளும் சக்தி இவை சத்திரியர்களின் இயற்கையாக குணங்களாம்.

*“சௌர்யந் தேஜோத்ருதிர்-தாக்ஷ்யம் யுத்தே சர்ப்ய பலாயனம்*
*தான-மீச்வரபாவச்ச க்ஷாத்ரம் கர்ம ஸ்வபாவஜம்” (அத்.18- சுலோகம் 43)*

பயிர்த்தொழில், பசுக்களை காத்தல், வாணிபம் என்பவை வைசியனுக்கு இயற்கையாக உண்டான கர்மங்களாகும். சேவை புரிவது சூத்திரனுக்கு இயற்கையாக உண்டான கர்மமாகும் என்று பகவத் கீதை மிகத் தெளிவாகக் கூறுகிறது. பிராமணர், சத்திரியர், வைசியர் அவரவர் கடமையைச் செய்ய வேண்டும், சூத்திரர்கள் மற்ற மூவருக்கும் சேவை செய்ய படைக்கப்பட்டவர்கள் என்று கீதையில் என்ன சொல்லப்பட்டிருக்கிறதோ, அதைத்தான் அசாம் மாநில பாஜக முதலமைச்சர் ஹிமந்த பிஸ்வா சர்மாவும் கூறியிருக்கிறார். ஆனால் இப்போது இந்த உண்மையெல்லாம் வெளியே தெரிந்து, மக்கள் விழிப்புணர்வு பெற்றால் கீதையையும் நம்ப மாட்டார்கள், இப்படிப்பட்ட ஏற்றத்தாழ்வான கட்டளைகளை விதிக்கிற கடவுள்களையும் நம்ப மாட்டார்கள். அதனால்தான் எதிர்ப்புக் கிளம்பியவுடன் பதிவை நீக்கிவிட்டு மொழிபெயர்ப்பில் தவறு என்று பூசி முழுகியிருக்கிறார்.

இந்த நாட்டின் பெரும்பான்மை மக்களாகிய பிற்படுத்தப்பட்டவர்களை மட்டுமல்ல, நால் வருண பெண்களையும், வைசியர்களையும் சேர்த்தே இழிவுபடுத்தியிருக்கிறது பகவத் கீதை.

*“மாம் ஹி பார்த்த வ்யாபாஸ்ரீத்ய யேஸ்பி ஸ்யு: பாப-யோன்ய:*
*ஸ்த்ரியோ வைச்யாஸ்-ததா சூத்ராஸ்-தேஸ் பி யாந்தி பராங்கிதம்” (அத்.9- சுலோகம் 32)*

அதாவது சூத்திரர்கள், வைசியர்கள், பெண்கள் இம்மூவரும் பாவ யோனியில் பிறந்தவர்கள் என்கிறது கீதை.

இவ்வளவு அநியாய அக்கிரமங்களை கிருஷ்ணரின் பெயரால் பார்ப்பனர்கள் கீதையின் வாயிலாக நம்மீது திணித்து வைத்திருக்கிறார் என்று எடுத்துச் சொல்லவும் கூடாதாம்.

*“ந புத்திபேதம் ஜனயே - தஜ்ஞானம் கர்மஸங்கினாம்*
*ஜோஷயேத் ஸர்வகர்மாணி வித்வான் யுக்த: ஸமாரசன்”*

‘‘நால் வர்ண கடமைகளைப் பற்றி அறியாதவர்களிடத்தில் குழப்பங்களையும் சந்தேகங்களையும் உண்டாக்கி விடக்கூடாது. சூத்திரர்களை தூண்டிவிட்டால் நீ அழிவாய்’’ என்று எச்சரிக்கையும் விடுக்கிறது கீதை. பிற்படுத்தப்பட்டவர்கள் விழித்துக்கொண்டு பார்ப்பனிய சுரண்டலை அறிந்துகொண்டால், பார்ப்பனர்களும் உடல் உழைப்புக்கு ஆளாக வேண்டுமே என்ற பகவத் கீதையின் அச்சம்தான், இப்போது ஹிமந்த பிஸ்வா சர்மாவை பதிவையும் நீக்க வைத்திருக்கிறது. புரட்சியாளர் அம்பேத்கர் கூறியதுபோல முட்டாள்களின் உளறலான கீதையை தோலுரித்து, மக்கள் மத்தியில் அம்பலப்படுத்த இத்தகைய வாய்ப்புகளைப் பயன்படுத்திக்கொள்வோம்.

# மயிலாப்பூரில் மார்கழியில் மக்களிசை




வகுப்புவாரி பிரதிநிதித்துவத்திற்கான தீர்மானத்தை காங்கிரஸ் கட்சி ஏற்காதபோது பெரியார் விவாதத்தில் ஈடுபட்டார். அப்போது கீழே இருந்த பார்ப்பனர்கள் கூச்சலிட, அவர்களைப் பார்த்து, “நீங்கள் கூச்சலிட்டு நான் அமைதியாக வேண்டுமா? நாங்கள் திரும்பி கூச்சலிட்டால் நீங்கள் என்ன ஆவீர்கள் என யோசித்துப் பாருங்கள்” என்றாராம் பெரியார். அப்படித்தான் மார்கழி மாதம் வந்துவிட்டாலே போதும்... பார்ப்பனர்கள் சில நூறு பேர் சபாக்களை நடத்துவதும், பார்ப்பனர்களால் பார்ப்பனர்களுக்காக நடத்தப்பட்ட இந்த சபாக்கள் இல்லாவிட்டால் சென்னைக்கு இசையே இல்லை என்பதுபோல, பார்ப்பன ஏடுகள் பக்கம், பக்கமாக சிலாகித்து எழுதுவதும் காலங்காலமாக தொடர்ந்து கொண்டிருந்தது.

இப்போதும் அது தொடர்ந்துகொண்டுதான் இருக்கிறது என்றாலும், இப்போதெல்லாம் மார்கழி மாதம் வந்துவிட்டாலே “மார்கழியில் மக்களிசை” எங்கே நடக்கிறது என்று மக்கள் தேட ஆரம்பித்துவிடுகிறார்கள். இயக்குநர் பா.ரஞ்சித்தின் நீலம் பண்பாட்டு மையம் சார்பில், 4-வது ஆண்டாக மயிலாப்பூரில் உள்ள சாந்தோம் பகுதியில் டிசம்பர் 30, 31 ஆகிய 2 நாட்கள் “மார்கழியில் மக்களிசை” நிகழ்ச்சி நடைபெற்றது.

சென்னையின் இசை சபாக்களில் இல்லை, கானாக்களில்தான் இருக்கிறது என ஒவ்வொரு ஆண்டும் மார்கழியில் மக்களிசைக்கு கூடிக்கொண்டே செல்லும் மக்கள் கூட்டம் நிரூபித்து வருகிறது. பண்பாட்டுத் தளத்தில் பார்ப்பனிய எதிர்ப்பை, நவீன முறையில் மேற்கொள்ளும் நீலம் பண்பாட்டு மையத்தின் இம்முயற்சி பாராட்டப்பட வேண்டிய ஒன்று.

# சென்னை, கடலூரில் பெரியார் நினைவுநாள் பொதுக்கூட்டங்கள்




**கடலூர் :** கடலூர் மாவட்டக் கழக சார்பில் கடந்த 30.12.2023 ஞாயிற்றுக்கிழமை மாலை 5 மணிக்கு புவனகிரியில் தந்தை பெரியார் - புரட்சியாளர் அம்பேத்கர் நினைவு நாள் பொதுக்கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்திற்கு கடலூர் கிழக்கு மாவட்ட அமைப்பாளர் மாணிக்.முருகேசன் தலைமை தாங்கினார். பெரியார் பிஞ்சு திராவிட மகிழன், மற்றும் வெங்கடேசன் ஆகியோரின் பாடல்களுடன் கூட்டம் தொடங்கியது.

அ.மதன்குமார் வரவேற்றார், கள்ளக்குறிச்சி மாவட்ட செயலாளர் க.ராமர், மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் முன்னாள் ஒன்றிய செயலாளர் சதானந்தம், கழக கடலூர் மேற்கு மாவட்ட அமைப்பாளர் ந.கொளஞ்சி, தமிழ்நாடு மாணவர் கழகத் தோழர் தேன்மொழி, தியாகி பாலா பேரவையின் பொதுச்செயலாளர் கார்ல் மார்க்ஸ், தமிழ்நாடு அறிவியல் மன்றத் தலைவர் ஆசிரியர் சிவகாமி ஆகியோர் கருத்துரையாற்றினர்.

நிறைவாக கழகத் தலைவர் கொளத்தூர் மணி சிறப்புரையாற்றினார்.

கடலூர் மாவட்ட கழகச் செயலாளர் அ.சதிசு நன்றி கூறினார்.

**சென்னை :** தந்தை பெரியாரின் 50வது நினைவுநாள் பொதுக்கூட்டம், 20.12.2023, புதன்கிழமை மாலை 6 மணிக்கு புரசைவாக்கம் தானா தெருவில் நடைபெற்றது.

அருள்தாஸ் - பேரன்பு குழுவின் ராப் இசை பாடல்களுடன் கூட்டம் தொடங்கியது.

கூட்டத்திற்கு சேத்துப்பட்டு இராசேந்திரன் தலைமை வகித்தார், தட்சணாமூர்த்தி வரவேற்புரையாற்றினார், கோ.துரை, ஏசு குமார் முன்னிலை வகித்தனர்.


கழகத் தலைவர் கொளத்தூர் மணி, விசிக துணைப் பொதுச் செயலாளர் ஆளூர் ஷா நவாஸ் எம்.எல்.ஏ., தமிழ்நாடு மாணவர் கழகத் தோழர் தேன்மொழி ஆகியோர் சிறப்புரையாற்றினர்.

வழக்கறிஞர் இளவரசன் நன்றி கூறினார்.

கூட்டத்தில் கழகத் தலைமை நிலையச் செயலாளர் தபசி குமரன், தலைமைக்குழு உறுப்பினர் அன்பு தனசேகர், தென் சென்னை மாவட்டத் தலைவர் வேழவேந்தன், கரு. அண்ணாமலை, மயிலைப் பகுதித் தலைவர் இராவணன், திருவல்லிக்கேணி பகுதிச் செயலாளர் அருண்குமார், அ.வ.வேலு மற்றும் கழகத் தோழர்கள், பொதுமக்கள் திரளாகக் கலந்து கொண்டனர்.

# “தமிழ் மீது எனக்கு வெறுப்பில்லை”

## பெரியார் அறிக்கை



***1970ஆம் ஆண்டில் “தமிழ்ப் பாடமொழித் திட்டத்தை” கலைஞர் அமல்படுத்தியபோது அதனை வரவேற்று பெரியார் அளித்த அறிக்கை.***

தமிழ்நாட்டில் வீழ்ச்சி அடைந்த காங்கிரஸ் இயக்கம் தலை எடுக்க, வளர நான் காரணமாக இருந்தேன். காங்கிரஸ் கட்சியில் இருந்து வெளியேறி சுயமரியாதை இயக்கம் கண்டு நீதிக்கட்சித் தலைவரானதன் காரணமே பார்ப்பனரல்லாத தமிழர்களின் எதிர்கால வாழ்வை ஒளிமயமாக ஆக்குவதற்காகவேயாகும்.

அதற்காக அன்றிலிருந்து இன்றுவரை நான் ஓய்வெடுக்க டாக்டர்கள் கூறியும் ஒரு நிமிடமும் ஓய்வு கொள்ளாமல் பணியாற்றிக்கொண்டுள்ளேன்.

லட்சியங்களில் வெற்றி பலருக்குக் கிடைத்தது போல், எனக்கு இளமைக் காலத்தில் கிடைக்காவிட்டாலும் எனது முதுமைக் காலத்திலாவது கிடைத்தது என்பதற்கு அடையாளமாகத்தான் என்னோடு இருந்து வளர்ந்தவர்களால் ஆட்சி இன்றைக்கு நடைபெற்றுக்கொண்டிருக்கிறது.

**தமிழ்ப் பாட மொழி என்ற யுத்த தளவாடம்:**

இந்த ஆட்சியுனுடைய சாதனைகளில் எந்தவித ஓட்டை உடைசல்களையும் குறிப்பிட்டுக்காட்டி எதிர்க்கமுடியாமல் தமிழ்ப் பாட மொழிப் பயற்சியைத் தங்கள் யுத்த தளவாடமாக எடுத்துக்கொண்டு, ஆச்சாரியாருடைய சுதந்திராக்கட்சியும், ஆரிய ஏடுகளும் இந்த ஆட்சியைக் கவிழ்க்கக் காரணம் காட்டி, மாணவர்களை தூண்டிவிடுகின்றன.

இதற்கு பார்ப்பனரல்லாத இனத்து விபீஷணர்களும் ஆளாகி விட்டிருக்கிறார்கள். ஆச்சாரியரோடு திமுக தொடர்பு கொண்ட நேரத்திலும் அது தன்னுடைய கொள்கையை எந்த நேரத்திலும் ஆச்சாரியாருக்கு விட்டுக்கொடுத்ததில்லை.

உதாரணமாக இந்தி எதிர்ப்புக் கொள்கைக்கு ஆச்சாரியாரை திமுக தன் பக்கம் திமுக இழுத்து வந்ததே அல்லாமல் சுதந்தரா வழிக்கு போய்விடவில்லை.

**எதிர்காலம் பற்றி மிகவும் அச்சம் :**

பொது உடைமை தத்துவ விசயங்களிலும் ஆச்சாரியாருக்கு முரண்பட்ட நிலையில்தான் திமுக நடந்துவருகிறது. தமிழ்ப்பாட மொழி விசயத்திலும், தான் வகுத்த கொள்கைப்படிதான் இருந்திருக்கிறதேயல்லாமல், ஆச்சாரியாக் கோஷ்டிக்கு கொஞ்சமும் விட்டுக்கொடுக்கவில்லை. இதற்கு ஆதாரம் இன்றைக்கு ஆச்சாரியார் காங்கிரசுடன் அளவளாவி, அதற்கு கைகொடுப்பதே போதுமானது. அன்றியும் அவர்களது இன்றுள்ள நிலைமைஎப்படியாவது திமுகவை தோற்கடிக்க வேண்டும். 72 தேர்தலில் காங்கிரஸ் ஜெயிக்க வேண்டும்; அது பதவியில் அமர வேண்டும் என்பதேயாகும். மற்றும் காமராசர் போன்றவர்கள் தாங்கள் முன்பு சொல்லிவந்த சோஷலிசக் கொள்கை, தமிழ்ப்பாட மொழிக் கொள்கை - எல்லாவற்றையும் பார்ப்பனர்களின் காலடியில் வைத்துவிட்டதைப் பார்க்கும் போது எனக்குப் பார்ப்பனரல்லாத மக்களின் எதிர்காலத்தைப் பற்றி மிகவும் அச்சம் ஏற்படுகிறது.

**தமிழ் மீது எனக்கு தனி வெறுப்பில்லை :**

தமிழ்மொழி, ஆங்கில மொழி இரண்டைப் பற்றியும் எனது கருத்தை பலமுறை சொல்லியிருக்கிறேன்.

ஆங்கிலம் வளர்ந்த மொழி - விஞ்ஞான மொழி என்பதும் தமிழ் மொழி வளர்ச்சியடையாத பழமையான மொழி என்பதும் என்னுடைய மதிப்பீடாகும். இதை நான் சொன்னதற்கான முக்கிய நோக்கம், தமிழ் மொழி ஆங்கில மொழி அளவுக்கு விஞ்ஞான மொழியாகவும், பகுத்தறிவு மொழியாகவும் ஆகவில்லை என்பதுதானே தவிர, தமிழ் மீது எனக்குத் தனி வெறுப்பில்லை.

நான் பேசுவதும் எழுதுவதும் தமிழில்தான். தமிழ் எழுத்துக்களில் நான் பல சீர்திருத்தங்களை எனது இயக்கப் பத்திரிக்கைகளான “குடிஅரசு” “பகுத்தறிவு” “விடுதலை” “உண்மை” ஆகியவற்றில் புகுத்தியிருக்கிறேன்.

**இதில் புதிய செயல் எதுவும் இல்லை :**

இன்றுள்ள திமுக அரசு நெடுநாளைக்கு முன்பு காமராஜ் முதலமைச்சராக இருந்த போது தமிழ்ப் பாட மொழித் திட்டமாக ஆக வேண்டும் என்று எடுத்த முடிவைத் துரிதப்படுத்துகிறதே ஒழிய, இதில் புதிய செயல் ஏதும் இல்லை. ஆகவேதான் அதற்கான புதிய சொற்களைக் கொண்ட புத்தகங்கள் வெளியிடப்படுகின்றன.

தமிழில் படித்தவர்களுக்கு வேலைவாய்ப்பு இல்லாமல் போய்விடுமோ என்ற கவலையைப் போக்க, சமீபத்தில் அரசாங்க அலுவல்களில் தமிழில் படித்தவர்களுக்கு நிறைய வாய்ப்பு என முதலமைச்சர் தந்துள்ள உத்தரவாதம் பார்ப்பனரல்லாத மாணவர்களுக்கு எதிர்காலத்தில் தமிழ் நாட்டு அரசாங்க அலுவல்களில் நிறைய இடம் கிடைக்கும் என்பதற்கான முன் அறிவிப்பாகும்.

> **“தமிழ்மொழி ஆங்கில மொழி அளவுக்கு விஞ்ஞான மொழியாகவும், பகுத்தறிவு மொழியாகவும் ஆகவில்லை என்பதுதானே தவிர, தமிழ் மீது எனக்கு தனி வெறுப்பில்லை. நான் பேசுவதும் எழுதுவதும் தமிழில்தான்”**

**டில்லியில் பார்ப்பன ஆதிக்கம் :**

ஆங்கிலம் படித்தவர்கள் தான் வெளிமாநில வேலைக்குச் செல்ல முடியும், என்று சொல்லுகிற விதத்தில் பசை இருப்பது போல் தோன்றினாலும் அந்த வேலைவாய்ப்புகளை இதுவரை பெற்றிருப்பவர்கள் யார்? இனிமேல் பெறக்கூடியவர்கள் யார்? எதை படித்தாலாவது வேலை கிடைக்குமா? என்று பார்த்தால் 100க்கு 50 பேர் பார்ப்பன சமூகத்தைச் சேர்ந்தவர்கள் தானே வேலை கொடுப்பவர்களாக இருக்கிறார்கள் எப்படி எனில் டெல்லியில் ஆண்டு கொண்டிருக்கின்ற அதிகாரிகளில் பல பேர் பார்ப்பனர்கள் தான். அங்கு முருகன் கோயிலையும்கட்டி, அதற்கு நமது முதலமைச்சர் கலைஞர் அவர்களையும் அழைத்துக்கொண்டு போய்க்காட்டுகின்ற அளவுக்கு டெல்லியை ஆக்கரமித்துக் கொண்டுள்ளனர் தமிழ் நாட்டுப் பார்ப்பனர்கள்.

தமிழ்நாடு அரசு அலுவலகங்களிலும் அவர்கள் தான் நிரம்பியிருக்கிறார்கள்.

**நாட்டுக்குப் பெரிய அபாயமாகும் :**

பொல்லாத வாய்ப்பால் ஆச்சாரியார் கனவு காண்பதுபோல் காங்கிரஸ் பார்ப்பனர் கூட்டணியுடன் ஆட்சி பீடம் ஏறும் வாய்ப்பு ஏற்பட்டுவிட்டால், பார்ப்பனரல்லாத பிள்ளைகள் என்ன படித்தாலும், என்ன தகுதி இருந்தாலும் பார்ப்பனப் பிள்ளைகளுக்குத்தான் முதல் உரிமை இருக்குமே தவிர, பார்ப்பனரல்லாதப் பிள்ளைகளுக்கு வாய்ப்பு எப்படி இருக்க முடியும்?

இதையெல்லாம் வெளியில் சொல்ல முடியாமல் மனதில் வைத்துத்தான் பார்ப்பனரல்லாத மாணவர்களுக்கு நன்மைகள் செய்யும் நோக்கத்தோடு தமிழ்ப் பாட மொழித் திட்டம் தீவிரமாக அமுல்படுத்தப்படுகிறது என்று கருதுகிறேன்.

இந்த நோக்கத்திற்கு இடையூறாக காமராஜ் போன்றவர்கள் வெறும் அரசியல் காரணங்களுக்காகத் தங்கள் போக்கை மாற்றிக் கொண்டு, மறைமுகமாகப் பார்ப்பனர்களுக்குத் துணைபோவது நாட்டுக்கு பெரிய அபாயமாகும்.

இதைப் பார்ப்பனரல்லாத மாணவர்கள் நல்லவண்ணம் சிந்தித்து நடந்துகொள்ள வேண்டும்.

**8500 பள்ளிகளை மூடியது யார் ஆட்சி ?**

எந்த காரணத்தாலோ இன்றைய ஆட்சிக்கு மாற்றமேற்பட்டால், நாடு வர்ணாசிரம ஆட்சிக்குத்தான் ஆளாகிவிடும்.உதாரணமாக சொல்லுகிறேன். என்னவென்றால் இதை மாணவர்களும் பெற்றோர்களும் உணர்ந்து பொறுத்துக்கொண்டால், அடுத்த ஆட்சிக்காலத்தில் சரி படுத்திக்கொள்ள முடியும் என்பது எனது உறுதியான கருத்தாகும். ஜஸ்டிஸ் கட்சி ஆட்சிக்குப் பின், 1938ல் காங்கிரஸ் ஆட்சி ஏற்பட்ட உடன், என்ன நிலை ஏற்பட்டது என்று பார்த்தால் காங்கிரஸ் ஆட்சி உத்தியோகத்தை மனதில் வைத்து 2500 பள்ளிகளை மூடியதோடு, மீதி உள்ள பள்ளி மாணவர்களை கட்டாயமாக இந்தி படிக்க வேண்டுமென்று உத்தரவு போடவில்லையா?

இதன் காரணமாக காங்கிரஸில் பார்ப்பன ஆதிக்கம் இல்லாமல் செய்ததுடன், காங்கிரசை ஒழிக்க பார்ப்பனர் ஆச்சாரியார் முயற்சிக்கவில்லையா?

**காங்கிரஸ் ஆட்சி வந்தால் தமிழர் கதி என்ன?**

இந்த அனுபவத்தைக் கொண்டே பார்ப்பனரல்லாத பொதுமக்களே! மாணவர்களே! சிந்தித்துப் பாருங்கள். நாளைக்கும் சுதந்தரா ஜனசங்கம் முதலிய பார்ப்பன வர்ணாசிரமக் கட்சிகளின் ஆதிக்க ஆதரவுகொண்ட காங்கிரஸ் ஆட்சி பீடமேறும் வாய்ப்பு ஏற்பட்டால் தமிழர் கதி என்ன ஆகும் என்று சிந்தித்துப் பாருங்கள்.

தமிழர்களாகிய நாம் 40,50 ஆண்டுகளாகவே “காங்கிரஸ் ஒழிக” என்ற கோஷத்துடன் காங்கிரஸ் ஒழிய தொண்டாற்றி வந்திருக்கிறோம். அதன் பயனாக தமிழர் இன்றைய நிலைக்கு வந்திருக்கிறார்கள் தமிழ் மாணவர்களும் இன்றைய நிலைக்கு வர முடிந்தது. இதை மனதில் வைத்து எதிர்காலத்தைப் பற்றி சிந்தியுங்கள் என்று வேண்டிக்கொள்ளத்தான் இந்த அறிக்கையாகும். தமிழர்களே! ஒன்று மனதில் வையுங்கள் இந்த ஆட்சி கடுகளவு பார்ப்பன ஆதிக்கமுள்ள எந்தக்கட்சிக்குப் போனாலும் நமது கதி பழைய கதிதான், போராட ஆள் இல்லை; சுத்தமாக ஆளே இல்லை எனக்கும் எழுந்து நிற்க முடியாத வயதாகிவிட்டது; முன் எச்சரிக்கையோடு நம்மவர்கள் நடந்துகொள்ள வேண்டும்.

**பெரியார், 02.12.1970**

date of publication - every thursday tamil weekly Reg.No.tn/cc(S)Dn/459/22-24 licenced to post wpp no.tn/PMG(ccR)/WPP-462/22-24
puratchi periyar muzhakkam registered with the registrar of newspaper for india under no.tntam/2002/07776

# 2023-இல் இடையுறாது இயங்கிய கழகம்

தலைவர் கொளத்தூர் மணி, திமுக மாணவர் அணித் தலைவர் ராஜீவ் காந்தி உள்ளிட்டோர் கருத்துரையாற்றினர்.

**மார்ச்:** வயலூர் முருகன் கோயிலில் அறநிலையத்துறையால் நிர்ணயம் செய்யப்பட்ட 2 பார்ப்பனர் அல்லாத அர்ச்சகர்கள் நியமனம் செல்லாது என உயர்நீதிமன்ற மதுரைக்கிளை நீதிபதி ஜி.ஆர்.சுவாமிநாதன் தீர்ப்பளித்தார். இதனைக் கண்டித்து மார்ச் 9 அன்று சென்னை வள்ளுவர் கோட்டம் அருகே கழகம் கண்டன ஆர்ப்பாட்டம் நடத்தியது.

11.03.2023 அன்று கள்ளக்குறிச்சி நைனார்பாளையத்தில் “பறிபோகும் மாநில உரிமைகள்” பொதுக்கூட்டம் நடத்தப்பட்டது.

12.03.2023 அன்று மணியம்மையார் பிறந்தநாள் மற்றும் மகளிர் தினத்தை ஒட்டி தலைமை அலுவலகத்தில் பெண்கள் சந்திப்பு நிகழ்ச்சி நடைபெற்றது.

ஏப்ரல்: 29, 30 ஆகிய 2 நாட்கள் சேலத்தில் ”இது தமிழ்நாடு- இளம் தலைமுறையின் எச்சரிக்கை” மாநாடு சிறப்பாக நடைபெற்றது. அரங்க நிகழ்வுகளில் தருமபுரி எம்.பி. செந்தில்குமார், மருத்துவர் எழிலன் (ச.ம.உ), பேராசிரியர் ஜெயராமன், மதுக்கூர் ராமலிங்கம், முனைவர் சுந்தரவள்ளி, மருத்துவர் ரவீந்திரநாத், வழக்கறிஞர் வாஞ்சிநாதன், புலவர் செந்தலை கவுதமன், பொழிலன், மருத்துவர் தாயப்பன், பேராசிரியர் மணிகோ. பன்னீர்செல்வம் ஆகியோர் செறிவான கருத்துக்களை பகிர்ந்துகொண்டனர். கழகத் தோழர்களின் உரையும் பரவலாக பாராட்டைப் பெற்றது. குறும்படங்கள், கலை நிகழ்ச்சிகள், குழந்தைகள் நிகழ்ச்சிகள் வரவேற்பைப் பெற்றன.

2-வது நாள் மாலையில் நடந்த பேரணி மிகப்பெரிய எழுச்சியை ஏற்படுத்தியது. இறுதியாக நடந்த பொதுவெளி மாநாட்டில் அமைச்சர் உதயநிதி பங்கேற்று ஆற்றிய சிறப்புரை முக்கியத்துவம் பெற்றது. கழகத் தலைவர் கொளத்தூர் மணி, பொதுச் செயலாளர் விடுதலை ராசேந்திரன், விசிக துணைப்பொதுச்செயலாளர் வன்னி அரசு உள்ளிட்டோரும் சிறப்புரையாற்றினர். மாநாட்டு மேடையில் தோழர்கள் காயத்ரி- எழிலரசன் ஆகியோரின் சுயமரியாதைத் திருமணம் நடைபெற்றது. பல்லாயிரக்கணக்கில் தோழர்கள் திரண்டு, 2 நாள் மாநாட்டை மிகப்பெரிய வெற்றியடையச் செய்தனர்.

**மே:** கொடைக்கானலில் ஆளுநர் ஆர்.என்.ரவிக்கு திண்டுக்கல் மாவட்டக் கழகம் சார்பில் கருப்புக்கொடி காட்டி எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டது.

21.05.2023 அன்று சேலத்தில் கழகத்தின் செயலவைக் கூடியது. தமிழ்நாடு முழுவதும் “எது திராவிடம்? எது சனாதனம்?” என்ற தலைப்பில் 1,000 தெருமுனைக் கூட்டங்கள் நடத்துவது என தீர்மானிக்கப்பட்டது. தீண்டாமையைக் கடைப்பிடிக்கும் கிராமங்களை பட்டியலெடுக்க தோழர்களுக்கு உத்தவிடப்பட்டது.

**ஜூன்:** விழுப்புரம் மேல்பாதி திரவுபதி அம்மன் கோயிலில் பட்டியல் சமூகத்தினர் நுழைய அனுமதி மறுக்கப்பட்டதைக் கண்டித்து மதுரையில் கழகத்தின் சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது.

தீண்டாமை கணக்கெடுப்பு பணி ஈரோடு, கோவை, சேலம் மாவட்டங்களில் தொடங்கியது. திருப்பூரில் “எது திராவிடம்? எது சனாதனம்?” தெருமுனைக் கூட்டங்கள் தொடங்கின.

தருமபுரம் ஆதினத்தை பல்லக்கில் சுமப்பதைத் தடை செய்யக்கோரி தோழமை அமைப்புகளோடு இணைந்து மயிலாடுதுறையில் கழகம் ஆர்ப்பாட்டம் நடத்தியது.

24.06.2023 அன்று சேலம் மாநாட்டு தீர்மானங்கள் விளக்கப் பொதுக்கூட்டம் பொள்ளாச்சியில் நடைபெற்றது. கழகத் தலைவர் கொளத்தூர் மணி, திமுக ராஜீவ் காந்தி பங்கேற்றனர்.

தமிழ்நாட்டு மக்களின் உணர்வுகளுக்கு எதிராகவும், சனாதன பரப்புரையாளராகவும் செயல்பட்டுக் கொண்டிருந்த ஆளுநர் ஆர்.என். ரவி, சேலம் பெரியார் பல்கலைக்கழக பட்டமளிப்பு விழாவுக்கு வருகை தரக்கூடாது என 28.06.2023 அன்று சேலத்தில் கழகத் தலைவர் தலைமையில் கருப்புக்கொடி காட்டும் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

**ஜூலை:** 01.07.2023 அன்று மதுரையில் வைக்கம் போராட்ட நூற்றாண்டு கருத்தரங்கம் நடைபெற்றது.

சேலம், சென்னை, தஞ்சை, ஈரோடு மாவட்டங்களில் “எது திராவிடம்? எது சனாதனம்” தெருமுனைக் கூட்டங்கள் தொடங்கப்பட்டு எழுச்சியோடு நடைபெற்றன. “திராவிடர் விடுதலைக் கழகத்தின் இம்முயற்சி மக்கள் மனதில் கொள்கைகளைப் பாய்ச்சும் சிறந்த பாய்ச்சல்” என முரசொலி ஏடு பாராட்டியது.

மணிப்பூரில் கலவரத்தைக் கட்டுப்படுத்தத் தவறிய பாஜக அரசைக் கண்டித்து சேலம் மாவட்டம் கொளத்தூரில் 23.07.2023 அன்று தோழமை அமைப்புகளுடன் இணைந்து ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது. 29.07.2023 அன்று கழகத் தலைவர் கொளத்தூர் மணி தலைமையில் சேலத்தில் ரயில் மறியல் போராட்டமும் நடைபெற்றது. 200-க்கும் மேற்பட்டோர் கைது செய்யப்பட்டு விடுவிக்கப்பட்டனர்.

**ஆகஸ்ட்:** கழகத்தின் 12-ஆம் ஆண்டு தொடக்க நாளையொட்டி 12.08.2023 அன்று மேட்டூரில் பொதுக்கூட்டம் நடத்தப்பட்டது.

மணிப்பூர் கலவரத்தை கட்டுப்படுத்தத் தவறிய பாஜக அரசை கண்டித்து 10.08.2023 அன்று கடலூரில் ஆர்ப்பாட்டம்.

நாங்குநேரியில் தலித் மாணவர் மற்றும் அவரது சகோதரியை வீடு புகுந்து வெட்டிய ஆதிக்க ஜாதி மாணவர்களின் செயலைக் கண்டித்து மதுரை வனவாசியில் 17.08.2023 அன்று கண்டன ஆர்ப்பாட்டம்

நீட் தேர்வுக்கு எதிராக உள்ள ஆளுநர் ஆர்.என்.ரவியைக் கண்டித்தும் ஒன்றிய அரசைக் கண்டித்தும் திமுகவின் மருத்துவ- மாணவர்- இளைஞர் அணிகள் இணைந்து உண்ணாவிரதப் போராட்டம் நடத்தின. சென்னை வள்ளுவர் கோட்டத்தில் அமைச்சர் உதயநிதி தலைமையில் நடந்த போராட்டத்தில் கழகத் தலைவர் கலந்துகொண்டு நீட் தேர்வு திணிக்கப்பட்ட சதி வரலாறுகளை சுட்டிக்காட்டினார்.

18.02.2023 அன்று கோவையில் பாரதியார் பல்கலைக்கழக பட்டமளிப்பு விழாவுக்குச் சென்ற ஆளுநர் ஆர்.என்.ரவிக்கு கழகத்தின் சார்பில் கருப்புக்கொடி காட்டி எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டது.

**செப்டம்பர்:** திண்டுக்கல்லில் மதர் தெரசா பல்கலைக்கழக பட்டமளிப்பு விழாவுக்குச் சென்ற ஆளுநர் ஆர்.என்.ரவியை கண்டித்து கழகத்தின் சார்பில் கருப்புக்கொடி காட்டும் போராட்டம் நடத்தப்பட்டது.

17.09.2023 அன்று பெரியார் பிறந்தநாளையொட்டி சென்னை ராயப்பேட்டையில் “எது திராவிடம்? எது சனாதனம்” 100-வது கூட்டம் நடைபெற்றது. விசிக தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான முனைவர் திருமாவளவன் பங்கேற்று சிறப்பித்தார். சனாதனத்திற்கு எதிரான யுத்தம், EWS இடஒதுக்கீடு- 68 ஆண்டுகளுக்குப் பிறகு வஞ்சம் தீர்த்த பார்ப்பனர்கள் ஆகிய நூல்கள் வெளியிடப்பட்டன.

25.09.2023 அன்று தஞ்சையில் பெரியார் பிறந்தநாள்- வைக்கம் நூற்றாண்டு- கலைஞர் நூற்றாண்டு பொதுக்கூட்டம் நடைபெற்றது.

திண்டுக்கல், கள்ளக்குறிச்சி, தஞ்சை, தருமபுரி, கரூர், ஈரோடு, கோவை, சேலம் என பல்வேறு மாவட்டங்களில் “எது திராவிடம்? எது சனாதனம்?” பரப்புரை கூட்டங்கள் எழுச்சியோடு நடைபெற்றன.

**அக்டோபர்:** சேலம் வனவாசியில் அரசு பாலிடெக்னிக் கல்லூரி வளாகத்திற்குள் சட்ட விரோதமாக நிறுவப்பட்ட பிள்ளையார் சிலை கழகத் தோழர்களின் முயற்சியால் 03.10.2023 அன்று அகற்றப்பட்டது.

07.10.2023 அன்று சென்னை வில்லிவாக்கத்தில் திமுக சார்பில் அமைச்சர் சேகர்பாபு தலைமையில் நடைபெற்ற கலைஞர் நூற்றாண்டு விழாவில் பொதுச்செயலாளர் விடுதலை ராசேந்திரன் பங்கேற்று சிறப்புரையாற்றினார்.

08.10.2023 அன்று திண்டுக்கல்லில் “எது திராவிடம்? எது சனாதனம்” 100-வது கூட்டம் நடைபெற்றது. கழகத் தலைவர் கொளத்தூர் மணி, திமுக மாணவர் அணித் தலைவர் ராஜீவ் காந்தி பங்கேற்று உரையாற்றினர்.

21.10.2023 அன்று “நீட் விலக்கு நம் இலக்கு” கையெழுத்து இயக்கத்தை திமுக தொடங்கியது. தருமபுரியில் கழகத் தலைவர் கொளத்தூர் மணி கையெழுத்து இயக்கத்தை தொடங்கிவைத்தார்.

**நவம்பர்:** கலைஞர் நூற்றாண்டை ஒட்டி கோவை மாநகரில் 10 தெருமுனைக் கூட்டங்கள் நடத்தப்பட்டு, நிறைவாக 04.11.2023 அன்று கவுண்டம்பாளையம் பகுதியில் பொதுக்கூட்டம் நடத்தப்பட்டது. கழகத் தலைவர் கொளத்தூர் மணி, திமுக மாணவர் அணித் தலைவர் ராஜீவ் காந்து கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

சென்னையில் “எது திராவிடம்? எது சனாதனம்” 2-ஆம் கட்ட தெருமுனைக் கூட்டங்கள் தொடங்கப்பட்டன.

26.11.2023 அன்று கழகத்தின் சார்பில் சென்னை, கோவை, கோபி, ஈரோடு தெற்கு, மதுரை, சேலம், திருப்பூர் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில், சட்ட எரிப்புப் போராளிகளை நினைவுகூறும் வீரவணக்க நாள் நிகழ்வுகள் கடைபிடிக்கப்பட்டன.

27.11.2023 அன்று மேட்டூர் அருகே விடுதலைப் புலிகள் 3 ஆண்டுகள் இராணுவப் பயிற்சி எடுத்த புலியூரில் கழகத்தின் சார்பில் மாவீரர் நாள் நிகழ்ச்சி நடத்தப்பட்டது. வழக்கறிஞர் இரத்தினம் பங்கேற்றார். மதுரையிலும் மாவீரர் நாள் நிகழ்வு நடைபெற்றது.

**டிசம்பர்:** சென்னையில் மிக்ஜாம் புயலால் பாதிக்கப்பட்ட மயிலாப்பூர் கணேசபுரம், ரூதர்புரம், சைவ முத்தையா தெரு, செல்லம்மாள் தோட்டம், சத்தியவாணி முத்து நகர், சுப்புராயன் சாலை, விசாலாட்சி தோட்டம், கணேசபுரம், முண்டககன்னியம்மன் கோயில் ஆகிய பகுதிகளில் கழகத்தின் சார்பில் உணவு வழங்கப்பட்டது.

10.12.2023 அன்று மதுரையில் சட்ட எரிப்பு நாள் கருத்தரங்கம் நடைபெற்றது. வீரஞ் செறிந்த போராட்ட வரலாற்றை கழகத் தலைவர் கொளத்தூர் மணி நினைவுகூர்ந்து சிறப்புரையாற்றினார்.

பெரியாரின் 50-வது நினைவுநாளை ஒட்டி 20.12.2023 அன்று சென்னை புரசைவாக்கத்திலும், 23.12.2023 அன்று சேலம் கொளத்தூரிலும், 24.12.2023 அன்று ஈரோடு குருவரெட்டியூரிலும், 31.12.2023 அன்று புவனகிரியிலும் கழகத்தின் சார்பில் பொதுக்கூட்டங்கள் நடத்தப்பட்டன. தஞ்சை மாவட்டம் பேராவூரணியில் கருத்தரங்கம் நடைபெற்றது.

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS Under WPP
Posted : January 05, 2024

owner and publisher by : k. rajendran, from 29, Journalists colony, thiruvalluvar nagar, thiruvanmiyur, chennai - 600 041.
and printed by : S. Theesmas, at lilly soosai offset, new no.8, old No.12/1, mohammed usain lane, royapettah, chennai - 600 014.
editor ; k. rajendran